**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE,<br>KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 08 / 2020** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அ.சா. 7<br><br>Defense<br>Court |
| Name | செந்தில் |
| Father's Name | வீரன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.08.2026. | |

**முதல் விசாரணை**

நான் பொருந்தலூர் கிராமம், எட்டமநாயக்கன்பட்டியில் குடியிருந்து உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் வீட்டில் தான் இருந்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும். எதிரியை தெரியும். சுமார் 5 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் நானும், அ.சா.1யும் எனது வீட்டில் சாப்பிட்டு தூக்கி கொண்யிருந்தோம். எனது மனைவி என்னை எழுப்பியபொழுது எனது பக்கத்தில் படுத்திருந்த செந்திலுக்கு காயம் ஏற்பட்டியிருந்தது. அதனால் காயம்பட்ட செந்திலை நான் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி செந்திலை யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது.

**அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தாகவும், போலீசார் விசாரணையில் நானும், எதிரி மோகனும் உடன்பிறந்த சகோதரர்கள் எனவும், மேற்படி எதிரியின் போக்கு எங்களுக்கு பிடிக்காததால் அவருடன் சமீபகாலமாக பேச்சு வார்த்தை எதனையிலும் ஈடுபடாமல் இருந்தோம் என்றும், கடந்த 19.05.2019ம் தேதி நானும், எனது நண்பரான அ.சா.1 எங்கள் வீட்டில் நின்று பேசிக்கொண்டியிருந்ததாகவும், அப்பொழுது எதிரி சத்தம் போட்டுக்கொண்டியிருந்தாகவும், அதற்கு அ.சா.1 ஏன் இப்படி சத்தம் போடுகீறேர்கள் என்று எதிரியை கேட்டதாகவும், அதற்கு எதிரி வெளியூர்கார நாய் எல்லாம் எப்படி என்னை கேட்கலாம் என்று சொல்லியதாகவும், அதனால் நானும், எனது மனைவியும் எதிரியையும், அ.சா.1-ஐயும் சமாதானம் செய்தோம் என்றும், பின்னர் இரவு 9.30 மணியளவில் நானும், அ.சா.1-யும் எங்களது வீட்டிற்கு வெளியே உள்ள கட்டிலில் படுத்துக்கொண்டியிருந்தாகவும், அப்பொழுது எதிரி அ.சா.1-ஐ பார்த்து இத்தோடு ஒழிந்துபோட, செத்து தொலைடா என்று சொல்லி அருவாளால் இடது பக்க காதை ஒட்டி வெட்டினார் என்றாலும், அப்பொழுது அதனை அ.சா.1 தடுக்க முயல வலது கை கட்டை விரல் மற்றும் இடது கை மணிகட்டு அருகே காயமும், மார்பின் மேல் இரண்டு பக்கங்களிலும் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், நானும், எனது மனைவியும் மேற்படி சம்பவத்தை பார்த்தோம் என்றும், மேற்படி காயம்பட்ட அ.சா.1 ஐ நானும், எனது மனைவியும் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரி எனது அண்ணன் என்பதால் எதிரி கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை - இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி
குளித்தலை.